தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 18-2-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடைக்கு வரும் கொண்டைக்கடலை விலையானது நிலையாக இருக்கும்

கொண்டைக்கடலை மற்ற பருப்பு வகைகளை விட அதிக அளவு புரதச்சத்தினை (25%) கொண்டுள்ளது. உலகளவில், 2013-14ல் 13.54 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு, 13.10 மில்லியன் டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியா (67%), ஆஸ்திரேலியா (6%), பாகிஸ்தான் (6%), துருக்கி (4%) மற்றும் மியான்மர் (4%) ஆகிய நாடுகள் சேர்ந்து உலகளவு கொண்டைக்கடலை உற்பத்தியில் 85 சதவீத பங்களிக்கின்றன. உலக உற்பத்தியில் நாட்டு இரகம் (கருப்பு) 85 முதல் 90 சதவீதமாகவும், காபூலி இரகம் (வெள்ளை) 10 முதல் 15 சதவீதமாகவும் உள்ளன.

இந்தியாவில், கொண்டைக்கடலையானது மிக முக்கிய பருப்பு வகையாகும், 2013-14ல் இந்தியாவின் மொத்த பருப்பு வகை உற்பத்தியில், கொண்டைக்கடலை 51 சதவீதம் பங்கு வகிக்கிறது. இந்தியாவின் பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குனரகம் அறிக்கையின்படி, 2013-14ல் இந்தியா 9.6 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 9.88 மில்லியன் டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்துள்ளது. மத்தியபிரதேசம் 43 சதவீத கொண்டைக்கடலை உற்பத்தி செய்து முதலிடத்திலும், இராஜஸ்தான் (13%), மகாராஷ்டிரா (11%), உத்திரபிரதேசம் (9%), ஆந்திரபிரதேசம் (7%) மற்றும் கர்நாடகா (5%) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்துள்ள இடத்தினை பெற்றுள்ளன.

2012-13ல் தமிழ்நாட்டில் 7036 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 4530 டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் உற்பத்தி திறன் ஒரு எக்டருக்கு 643 கிலோ ஆகும். திருப்பூர் (53%), தர்மபுரி (21%), கோயம்புத்தூர் (20%) மற்றும் திண்டுக்கல் (3%) ஆகிய மாவட்டங்கள் சேர்ந்து தமிழ்நாட்டின் மொத்த கொண்டைக்கடலை உற்பத்தியில் 97 சதவீத

உற்பத்தியை கொண்டுள்ளன. தமிழ்நாட்டில், இப்பயிர் கார்த்திகைப்பட்டத்தில் (அக்டோபர் - நவம்பர்) பயிரிடப்பட்டு, பிப்ரவரி – மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. உடுமலைப்பேட்டை சந்தையானது கொண்டைக்கடலை விற்பனைக்கு மிக முக்கியமான சந்தைகளில் ஒன்றாகும். இங்கு வரத்துக்கள் பிப்ரவரி மாதம் முதல் தொடங்கப்பட்டு, ஏப்ரல் மாதம் இறுதிவரை வருகின்றன. தற்போது கொண்டைக்கடலை விலையானது குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4100 ஆக உள்ளது.

இச்சூழலில், தமிழக விவசாயிகள் அறுவடை செய்த கொண்டைக்கடலையை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து விற்பதா என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 12 வருடங்களாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய கொண்டைக்கடலை விலையை ஆராய்ந்தது. இதனடிப்படையில், 2015ம் வருடம் மார்ச் மாதத்தில் கொண்டைக்கடலை விலையானது குவிண்டாலுக்கு ரூ.3800 முதல் ரூ.4000 வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனடிப்படையில் விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை தேர்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர், பயறுவகைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2450498

மக்கள் தொடர்பு அலுவலர்